CNR NO: TNTH13-003358-2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 148/2023

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தேவாரம் காவல்நிலையம்,
குற்ற எண்.166/2022. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

1).மச்சக்காளை (வயது 36/2026),
த/பெ.கருப்பசாமி.

2).பிரபாகரன் (வயது 32/2026),
த/பெ.கோபாலன். ..... எதிரிகள்

**<u>வழக்கின் சுருக்கம்</u>**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>தேவாரம் காவல்நிலையம். | எதிரிகள்:<br>1).மச்சக்காளை,<br>2).பிரபாகரன். |

| | | |
|---|---|---|
| 2. | எதிரிகளின் வயது | 1).36/2026,<br>2).32/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | 1).த/பெ.கருப்பசாமி,<br>2).த/பெ.கோபாலன். |
| 4. | மதம் | 1 மற்றும் 2 எதிரிகள் – இந்து. |
| 5. | தொழில் | 1 மற்றும் 2 எதிரிகள் – விவசாயம். |
| 6. | முகவரி | 1-வது எதிரி - பிள்ளையார் கோவில் தெரு, T.மீனாட்சிபுரம், தேவாரம்.<br>2-வது எதிரி - மேற்கு தெரு, T.மீனாட்சிபுரம், தேவாரம். |
| 7. | தாலுகா, மாவட்டம் | 1 மற்றும் 2 எதிரிகள் – உத்தமபாளையம், தேனி. |
| 8. | சம்பவம் நிகழ்ந்த நாள் | 09.10.2022. |
| 9. | கைது | 1 மற்றும் 2-வது எதிரிகள் - 12.10.2022. |
| 10. | பிணையில் விடுவித்தல் | 1 மற்றும் 2-வது எதிரிகள் - 16.10.2022. |
| 11. | எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் | 1 மற்றும் 2-வது எதிரிகள் – 5 நாட்கள். |
| 12. | இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.04.2023. |
| 13. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 21.04.2023. |
| 14. | கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி | 29.11.2024. |
| 15. | கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 18.12.2024. |
| 16. | விசாரணை துவக்கம் | 21.01.2025. |

<table>
<tr><td rowspan="4">17.</td><td rowspan="4">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td colspan="2">Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.03.2026</td><td colspan="2">25.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>25.03.2026</td><td colspan="2">25.03.2026</td></tr>
<tr><td>PW3</td><td>25.03.2026</td><td colspan="2">25.03.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="4">01.04.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="4">01.04.2026.</td></tr>
<tr><td rowspan="4">20.</td><td rowspan="4">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>25.03.2026</td><td>320(2) of Cr.P.C</td><td>1008/2026</td><td>Dismissed</td></tr>
<tr><td>25.03.2026</td><td>311 of Cr.P.C</td><td>1009/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>25.03.2026</td><td>294(3) of Cr.P.C</td><td>1010/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td rowspan="2">23.</td><td rowspan="2">தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள்</td><td colspan="4">22.10.2025 முதல் 06.11.2025 வரை - 1-வது எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td colspan="4">22.10.2025 முதல் 12.01.2026 வரை - 2-வது எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">2026-ஆம் வருடத்தில் தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 21.04.2023 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 01.04.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.ஜெயராஜ் அவர்கள் மற்றும் திரு.P.கோபிநாத் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இந்திய தண்டனைச் சட்டம் 1860 மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் 2002-ன் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு**:

கடந்த 08.10.2022–ஆம் தேதி 13.30 மணியளவில் வாதி லாவண்யா என்பவரின் மகனான சாட்சி - 2 பிரகாஷ் அவரது உறவினர்களுடன் மீனாட்சிபுரம் அடிவாரத்தில் உள்ள பெருமாள் கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்தபோது, 1-வது எதிரி மச்சக்காளை மற்றும் 2-வது எதிரி பிரபாகரன் ஆகிய இருவரும் சேர்ந்து, சாட்சி - 2-யிடம் Smart Phone-னை கொடுத்து, தான் சொல்லும் பொம்பளையை வீடியோ எடுத்துட்டு வா என்று சொல்லி Phone-ஐ கொடுத்ததாகவும், அதற்கு சாட்சி – 2 வாங்க மறுத்துவிட்டு,

இந்த செயலை தான் செய்ய மாட்டேன் என்று கூறியதற்கு, 1-வது எதிரி தேவிடியா மகனே திருவிழா முடியும் வரை தான் சொல்வதை கேளுடா சுண்ணி என்று சொல்லி அசிங்கமாகப் பேசி சத்தம் போட்டதாகவும், நடந்த விசயத்தை வாதியிடம் சொல்லி அழுததாகவும், இந்த பிரச்சனை சம்மந்தமாக வாதியும், வாதியின் கணவரும் 09.10.2022-ஆம் தேதி 13.30 மணிக்கு 1-வது எதிரியின் வீட்டு முன்பு இருந்த எதிரிகள் இருவரிடமும் ஏன் தன் மகனிடம் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரிகள் இருவரும் சாட்சி - 2-ஐப் பார்த்து ஏண்டி தேவிடியா மகனே என்று சொல்லி, 1-வது எதிரி அரிவாளால் சாட்சி - 2-ஐ வெட்ட வந்ததாகவும், அப்போது வாதி ஓடி வந்து தடுக்க அருவாள் வாதியின் வலது உள்ளங்கையில் பட்டு வெட்டியதாகவும், அப்போது எதிரிகள் இருவரும், வாதியை பெண்மணி என்றும் பாராமல் அவரது மனது புண்படும்படி, வாதியைப் பார்த்து ஏண்டி தேவிடியா மகளே உங்க குடும்பத்திற்கு சாவு எங்களால தாண்டி, உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று அசிங்கமாகப் பேசியும், அரிவாளைக்காட்டி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக, 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் மற்றும் 2-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் அரசுத்தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் பிரிவின் கீழ் 29.11.2024-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது முகாந்திரம் எழுந்ததால், 18.12.2024-ஆம் தேதியன்று 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும்

மற்றும் 2-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என்று கூறினார்கள். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு**:

5.1). அ.சா.1 லாவண்யா தனது முதல் விசாரணையில், 08.10.2022-ஆம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு தானும், தனது மகன் பிரகாசும் தங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மச்சக்காளை வீட்டின் முன்பாக சென்றபோது, அங்கிருந்த மச்சக்காளையும், பிரபாகரனும் தன்னிடம் பிரச்சனை செய்தது குறித்து தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், **புகார் மனு அ.சா.ஆ.1** என்றும், தற்சமயம் தான், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டு, அதற்கான சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், **சமாதான மனு அ.சா.ஆ.2** என்றும், எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை என்றும் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

5.2). அ.சா.3 சார்பு ஆய்வாளர் திருமதி.கிருஷ்ணவேணி சாட்சியத்தில், கடந்த 11.10.2022-ஆம் தேதி 14.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் ஜெகநாதன் என்பவர் தேவாரம் காவல்நிலையப் பொறுப்பில் இருந்தபோது, மனு எண்.419/2022-ஐ பார்வையிட்டு,

**நிலையக் குற்ற எண்**.166/2022, **இ.த.ச பிரிவுகள்** 294(b), 324, 506(ii) and 4 of TNPHW Act-**ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும்,** 11.10.2022-**ஆம் தேதி** 15.00 **மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் குழந்தைவேல் மற்றும் ஈஸ்வரன் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், பட்டியல் சாட்சிகள்** 1 **முதல்** 5 **வரையிலான நபர்களை விசாரித்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்து**, 12.10.2022-**ஆம் தேதி**, 07.00 **மணிக்கு** 1, 2 **எதிரிகளை தேவாரம் மீனாட்சிபுரத்தில் உள்ள சாக்குளத்து மெட்டு மலை அடிவாரம் அருகே உள்ள எதிரி மச்சக்காளையின் மாட்டுக்கொட்டகையில் இருவரையும் கைது செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, எதிரிகளுக்கு எதிராக வழக்கு விசாரணையை முடித்து**, 30.10.2022-**ஆம் தேதி இ.த.ச பிரிவுகள்** 294(b), 324, 506(ii) and 4 of TNPHW Act-**ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.**

6). **அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச** 313(1)(b) **பிரிவின் கீழ்** 01.04.2026-**ஆம் தேதி வினவியபோது, சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதால், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.**

7).**தீர்விற்குரிய பிரச்சினை**:

**இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின்** 1-**வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள்** 294(b), 324, 506(2) **மற்றும் பிரிவு** 4

தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் மற்றும் 2-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

8.1). கடந்த 08.10.2022–ஆம் தேதி 13.30 மணியளவில் அ.சா.1 லாவண்யா என்பவரின் மகனான அ.சா.2 பிரகாஷ் அவரது உறவினர்களுடன் மீனாட்சிபுரம் அடிவாரத்தில் உள்ள பெருமாள் கோவில் திருவிழாவிற்கு சென்றிருந்தபோது, 1-வது எதிரி மச்சக்காளை மற்றும் 2-வது எதிரி பிரபாகரன் ஆகிய இருவரும் சேர்ந்து, அ.சா.2-யிடம் Smart Phone-னை கொடுத்து, தான் சொல்லும் பொம்பளையை வீடியோ எடுத்துட்டு வா என்று சொல்லி Phone-ஐ கொடுத்ததாகவும், அதற்கு அ.சா.2 வாங்க மறுத்துவிட்டு, இந்த செயலை தான் செய்ய மாட்டேன் என்று கூறியதற்கு, 1-வது எதிரி தேவிடியா மகனே திருவிழா முடியும் வரை தான் சொல்வதை கேளுடா சுண்ணி என்று சொல்லி அசிங்கமாகப் பேசி சத்தம் போட்டதாகவும், நடந்த விசயத்தை வாதியிடம் சொல்லி அழுததாகவும், இந்த பிரச்சனை சம்மந்தமாக அ.சா.1-ம், அ.சா.1-ன் கணவரும் 09.10.2022-ஆம் தேதி 13.30 மணிக்கு 1-வது எதிரியின் வீட்டு முன்பு இருந்த எதிரிகள் இருவரிடமும் ஏன் தன் மகனிடம் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரிகள் இருவரும் அ.சா.2-ஐப் பார்த்து ஏண்டி தேவிடியா மகனே என்று சொல்லி, 1-வது எதிரி அரிவாளால் அ.சா.2-ஐ வெட்ட வந்ததாகவும், அப்போது அ.சா.1 ஓடி வந்து தடுக்க அருவாள் அ.சா.1-ன் வலது உள்ளங்கையில் பட்டு வெட்டியதாகவும், அப்போது எதிரிகள் இருவரும், அ.சா.1–ஐ பெண்மணி என்றும் பாராமல் அவரது மனது புண்படும்படி, அ.சா.1–ஐப் பார்த்து ஏண்டி தேவிடியா மகளே உங்க குடும்பத்திற்கு சாவு எங்களால தாண்டி, உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று அசிங்கமாகப்

பேசியும், அரிவாளைக்காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்கையில்,

8.2). புகார் கொடுத்த மற்றும் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 லாவண்யா தனது முதல் விசாரணையில், "**நான் தேவாரத்தில் வசித்து வருகிறேன். 08.10.2022-ஆம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு நானும், எனது மகன் பிரகாசும் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மச்சக்காளை வீட்டின் முன்பாக சென்றபோது, அங்கிருந்த மச்சக்காளையும், பிரபாகரனும் என்னிடம் பிரச்சனை செய்தார்கள். அது குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனு அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர். தற்சமயம் நான், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டேன். அதற்கான சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சமாதான மனு அ.சா.ஆ.2. எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை**" என சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமாக்கப்பட்டுள்ளார்.

8.3). அரசுத்தரப்பு குற்றச்சாட்டில், அ.சா.2–ஐ, 1-வது எதிரி தேவிடியா மகனே திருவிழா முடியும் வரை தான் சொல்வதை கேளுடா சுண்ணி என்று சொல்லி அசிங்கமாகப் பேசி சத்தம் போட்டதாகவும், மேற்படி விசயத்தை அ.சா.2, அ.சா.1–னிடம் சொல்லி அழுததாகவும், இந்த பிரச்சனை சம்மந்தமாக அ.சா.1-ம், அ.சா.1-ன் கணவரும், எதிரிகள் இருவரிடமும் ஏன் தன் மகனிடம் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரிகள் இருவரும் அ.சா.2-ஐப் பார்த்து ஏண்டி தேவிடியா மகனே என்று சொல்லி, 1-வது எதிரி அரிவாளால் அ.சா.2-ஐ வெட்ட வந்ததாகவும், அப்போது அ.சா.1 ஓடி வந்து தடுக்க அருவாள் அ.சா.1-ன் வலது உள்ளங்கையில் பட்டு வெட்டியதாகவும், அப்போது எதிரிகள் இருவரும், அ.சா.1–ஐ பெண்மணி என்றும் பாராமல் அவரது மனது புண்படும்படி, அ.சா.1–ஐப் பார்த்து ஏண்டி தேவிடியா மகளே உங்க குடும்பத்திற்கு சாவு எங்களால தாண்டி, உங்களைக் கொல்லாமல் விடமாட்டோம் என்று அசிங்கமாகப் பேசியும், அரிவாளைக்காட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குற்றச்சாட்டு

முன்னிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 லாவண்யா தனது முதல் விசாரணையில், எதிரிகள் தன்னை அசிங்கமாகப் பேசியதாகவோ, அரிவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, பெண் வன்கொடுமை செய்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை.

8.4). சம்பவ சாட்சியாக அரசுத்தரப்பில் முன்னிடப்பட்டுள்ள அ.சா.2 பிரகாஷ் தனது முதல் விசாரணையில், "**நான் தேவாரத்தில் வசித்து, படித்து வருகிறேன். 08.10.2022-ஆம் தேதி மதியம் சுமார் 03.00 மணிக்கு நானும், எனது அம்மாவும் எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள மச்சக்காளை வீட்டின் முன்பாக சென்றபோது, அங்கிருந்த மச்சக்காளையும், பிரபாகரனும் எங்களிடம் பிரச்சனை செய்தார்கள். அது குறித்து எனது அம்மா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர். தற்சமயம் நாங்கள், எதிரிகளுடன் சமாதானம் ஆகி கொண்டோம். எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்க தேவையில்லை**" என சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமாக்கப்பட்டுள்ளார்.

8.5). மேலும், புகார் கொடுத்த மற்றும் காயம்பட்ட சாட்சியான அ.சா.1 லாவண்யா மற்றும் அ.சா.2 பிரகாஷ் ஆகியோர் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி அரசுத்தரப்பிற்கு ஆதரவாகவும், எதிரிகளுக்குப் பாதகமாகவும் சாட்சியமளிக்கவில்லை. மேலும், அவர்கள் "**எதிரிகளுடன் சமாதானம் ஆகிக் கொண்டதாகவும், அதற்கான சமாதான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், எதிரிகள் மீது மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை**" என சாட்சியமளித்துள்ளதால், அரசுத்தரப்பும் நீதியின் நலன் கருதி மற்ற சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

8.6). எனவே, அ.சா.3-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசுத்தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது. எனவே, அரசுத்தரப்பு வழக்கு உரிய

சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கருதி, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>தீர்வு</u>**

9). முடிவாக, 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் மற்றும் 2-வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10). **<u>கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு</u>**:

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.15 18:45:08 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திருமதி.லாவண்யா | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.பிரகாஷ் | சம்பவ சாட்சி |
| 3. | அ.சா.3 | திருமதி.கிருஷ்ணவேணி | கூடுதல் சாட்சி |

**2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார் மனு. | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | சமாதான மனு. | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.3 |
| 4. | அ.சா.ஆ.4 | பார்வை மகஜர். | அ.சா.3 |
| 5. | அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம். | அ.சா.3 |

**3). அரசுத்தரப்பு சான்றுப் பொருள்**: இல்லை.

**4). எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்**: தாக்கல் இல்லை.

**5). குறிப்பு:**

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையிலிருந்து முன்னிலையானார்கள்.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.15 18:45:13 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.